*இணையத்தில் பதிவிறக்கம் செய்யwww.iaraindia.com*
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டுஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *IX*, பதிப்பு *22*, ஜனவரி - டிசம்பர்*2024*
*Formally UGC Approved Journal (64089), © Author*

# வளையாபதி கூறும் வாழ்வியல் அறம்

**முனைவர் சொ.யுகஜெயப்பிரதா,**
உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை,
தனலட்சுமி சீனிவாசன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
மாமல்லபுரம்.

## முன்னுரை

தமிழ் இலக்கியங்களில் காப்பியம் மிக உயர்வான இடத்தைப் பெற்றுள்ளது. எண்ணற்ற காப்பியங்கள் தோன்றி இன்றுவரை வளர்ந்து வருகிறது. காப்பியம் என்பது தொடர்நிலைச் செய்யுள் என்று அழைக்கப்படுகிறது. இதனைப் ஐம்பெருங்காப்பியம் என்றும் ஐஞ்சிறுகாப்பியம் என்றும் பகுத்துள்ளனர். ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றாக வளையாபதிக் காப்பியம் அமைந்துள்ளது. இன்றைய நடைமுறை வாழ்விற்கு வாழ்வியல் அறங்கள் மிகமிக தேவையானதாக உள்ளன. ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான வளையாபதியில் மிகுதியான அறக்கருத்துக்கள் காணப்படுகின்றன. வளையாபதிக் காப்பியம் ஒரு காலத்தில் மிகவும் புகழோடு விளங்கியதை உரையாசிரியர்கள் உரைகளின் வாயிலாக அறியமுடிகிறது. கற்புடைய தலைவியின் நற்பண்புகளையும், குழந்தைச் செல்வத்தின் பயனையும், களவு செய்தல், பொய்சொல்லுதல், பிற உயிர்களைக் கொல்லுதல் போன்றவற்றால் ஏற்படும் பாவத்தினையும் வளையாபதி விரிவாக எடுத்துரைக்கிறது. இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை போன்ற நிலையாமைக் கருத்துக்களையும் வளையாபதி தெளிவுற எடுத்து இயம்புகிறது. மனித வாழ்க்கை மேலும் மேன்மையுற வளையாபதி பல்வேறு அறங்களை எடுத்துரைக்கிறது. வாழ்வியலுக்குத் தேவைப்படும் அடிப்படையான அறங்களை வளையாபதி வாயிலாக இக்கட்டுரை விளக்க முற்படுகிறது.

## அறம் விளக்கம்

“அறு” என்ற வினைச்சொல்லின் அடியாகப் பிறந்ததே அறமாகும். அறம் என்றால் அறுத்து செல் அல்லது வழியை உண்டாக்கு என்று பொருள்படும். அறம் என்ற சொல்லிற்கு இணையாக ஆங்கிலத்தில் எதிக்ஸ் (நவாஜை௨ள) என்ற சொல்லை பயன்படுத்துவர், மனிதன் தனக்கென வகுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுப்பே அறம் என்று கூறுவர்.

## செல்வம் நிலையாமை

மனித வாழ்க்கைக்கு செல்வம் மிகவும் அடிப்படையான ஒன்றாகும். போதிய அளவு இல்லாதபோது வாழ்வே மிகவும் வருத்தம் உடையதாக ஆகிவிடும் செல்வம் ஓரிடத்தில் நிலைபெற்றிருப்பதில்லை. ஆதலால் நிலையில்லா செல்வத்தின் மீது மிகுந்த பற்று தேவையில்லை செல்வமானது வெள்ளமும். மறதியும், வெற்றியுடைய வேந்தரும், நெருப்பும். தாயத்தாரும் கள்வரும் என்று கூறப்படுகின்ற இந்த ஆறு வழிகளாலும் அழிந்து போகும். இயல்புடையதாகும் நிலையில்லாத பொருள் மேல் பற்றுவைக்காமல் சான்றோர் அவற்றைத் துறந்து

வாழ்வார். பிறர் இகழ்தற்குக் காரணமான பெரிய துயரங்களைச் செய்யும் பிறவிப் பிணியாகிய துன்பத்தை நீங்கி வாழ்வர் இதனை,

**வெள்ள மறவி விறல்வேந்தர் தீத்தாயம்**
**கல்வர்என்று இவ்வாறிற் கைகரப்பத் தீர்ந்தகலும்**
**உள்ளில் ஒரு பொருளை ஒட்டாது ஒழிந்தவர்**
**எள்ளும் பெருந்துயர்நோய் எவ்வம் இகப்பவோ (வளையாபதி. 35)**

என்ற வளையாபதி பாடல் குறிப்பிடுகிறது. அழிவில்லாத நல்ல தருமங்களைச் செய்யாதவர்களாகியும், யாசகர்களுக்குக் கொடாதவர்களாகியும், பொருளைச் சேர்த்து வைப்பவர்களள் செல்வம் உறுதியாக அதனை ஒருநாள் இழந்தே விடுவார்கள் இதற்கு பற்பல மலர்களினின்றும் தேனைக் கொண்டு வந்து கூட்டிலே சேர்த்துவைக்கும் தேனீ நல்ல சான்றாகும். தேன் கூட்டினின்றும் தேனைப் பிறர் எடுத்துக் கொள்வதுபோல அவனுடைய அவ்வளவு பொருளையும் எவரேனும் ஒரு நாள் கவர்ந்து கொண்டு போய் விடுவார் என்பதை,

**“உடாஅதும், உண்ணாதும், தன் உடம்பு செற்றும்**
**கெடாஅத நல்லறமும் செய்யார் கொடாஅது**
**வைத்தீட்டி னாரிழப்பர் வான்தோய் மலைநாட**
**உய்த்தீட்டும் தேனீக் கரி” (நாலடியார.10)**

என்று நாலடியார் பாடல் குறிப்பிடுகிறது. நிலை இல்லாத செல்வத்தைப் பலருக்கு உதவி செய்து வாழ்ந்தால் நிலைத்தப் புகழை அடையமுடியுமென்று வளையாபதி தெரிவிக்கின்றது.

**இளமை நிலையாமை**

மனித வாழ்க்கையில் இளமையும், இன்பம் நிலையில்லாததாகும். அதனைப் பாதுகாத்தாலும் அடுத்த பிறவிக்குக் கிடைத்திடாது. இப்பிறவியில் கிடைத்த இவற்றைக் கொண்டு நல்லறங்களைச் செய்ய வேண்டும். “இன்பநுகர்தற்குரிய இளமைப் பருவம் நிலையில்லாதது ஆகும். நுகரும் இன்பங்கள் நிலை இல்லாததாகும். அவ்வின்பத்திற்குக் காரணமான செல்வங்களும் நிலையானவை இல்லை. ஆதலால் இளமையும், இன்பமும், வளமையும் நிலைத்தனவென்று இருத்தல் வேண்டாம். முன்பு விளைந்த நிலத்தில் உள்ள பயிர்களிடமிருந்து விதையினை எடுத்து மறுபடியும் பயிர் செய்வது போல இளமையிலேயே அறமாகிய வித்தினை செய்து வாழ வேண்டும்” என்பதை,

**“இளமையும் நிலையாவால் இன்பமும் நின்ற அல்ல**
**வளமையும் அஃதேபோல் வைகலும் துன்பவெள்ளம்**
**உளவென நினையாதே செல்கதிக்கு என்றும்என்றும்**
**விளைநிலமே உழவார்போல் வித்துநீர் செய்துகொண்மீன்”**
**(வளையாபதி.41)**

என்னும் வளையாபதி பாடல் மூலம் அறியமுடிகிறது. மரங்களிலே முதிர்ச்சியுற்றிருந்த கனிகள் மட்டுமே அல்லாமல் நல்ல காய்களும் கடுங்காற்றினால் உதிர்ந்து போதலுமு நிகழ்வதுண்டு. அதுபோல முதியவர்கள் மட்டுமல்லாமல் இளமைப் பருவத்தினரும் இறந்து போதல் நிகழ்வது உண்டு. ஆதலால் இளமை நிலையற்றது என்பதை உணர்ந்து உடனே தருமஞ்செய்வதிலே ஈடுபடுங்களென்று,

**‘‘மற்றறிவாம் நல்வினை யாம் இளையம் என்னாது**
**கைத்துண்டாம் போழ்தே கரவாது அறஞ்செய்ம்மின்**
**முற்றி இருந்த கனியொழியத் தீவளியால்**
**நற்காய் உதிர்தலும் உண்டு” (நாலடியார.19)**

என்று நாலடியார் உணர்த்துகின்றது. இப்பிறவியில் கிடைத்த மனித வாழ்க்கையில் நல்லறங்களைச் செய்து அடுத்த பிறவிக்கான புண்ணியத்தைச் சேர்த்திட

வேண்டும். நிலையில்லாத இளமைப் பருவத்தில் நல்ல அறங்களைச் செய்து நிலையுடையதான புகழோடு வாழ்வதே சிறந்த வாழ்க்கையாகுமென்று வளையாபதி வற்புறுத்துகிறது.

**அன்பு செலுத்துதல், ஊழ்வினை**

மனித உலகத்தை இணைத்து வாழச்செய்யும் அற்புத சக்தி அன்புக்கே உண்டு. அறம் பெருக வேண்டும் எனில் நல்லனவற்றை தேடிச் சென்று இனிய சொற்களின் வழிக் கூறவேண்டும்.

**‘‘ஆற்று மின்னரு ளாருயிர் மாட்டெலாந்**
**தூற்று மின்னறந்தொறனி துன்னன்மின்**
**மாற்று மின்கழி மாயமு மானமும்**
**போற்று பின்பொரு ளாவியைக் கொண்டுநீர்”** (வளையாபதி.45)

என்ற பாடலின் வழி பிற உயிர்களிடத்து அன்பு செலுத்த வேண்டும் என்று சுட்டுவதை உய்த்துணர முடிகின்றது. இன்பம் துன்பம், என்பது நம் வினையின் காரணமாக அமைவதாகும். இன்பமும், துன்பமும் உலகின் இயல்புகளாகும் என்பதை உணர்ந்து விருப்பு, வெறுப்புகளை நீக்கி வாழ்ந்திடல் வேண்டும் என்பதை வளையாபதி.

**“பருவந்து சாலப் பலர்கொல் என்றெண்ணி**
**ஒருவந்தம் உள்ளத்து உவத்தல் ஒழிமின்**
**வெருவந்த துன்பம் விடுக்கும் திறவோன்**
**ஒருவன் உலகிற்கு ஊன் என்னுமாறே?** (வளையாபதி.49)

என ஊழ்வினை பற்றி பேசுகிறது. கொல்பவனக்கு தீவினை வருவது போலவே உண்பவனுக்கு பழியும், பாவமும், பகையும் ஆகியவை உறுதியாக வந்து சேரும், (ப.13), கொல்பவனுக்கு தீவினை வருவது போலவே. உண்பவனுக்கு தீவினை வந்து சேர்வது உறுதி (ப.18)என்று பாடல்களின் வழி அறியமுடிகிறது. ஒழுங்கு இன்றியமையாதவை என்று கருதப்பட்டு அவை கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டால் அவை அறங்கள் எனப்படும் அன்பாய் இருப்பது, இனிமையாக பேசுவது கடுஞ்சொற்களை தவிர்ப்பது அகத்தே எண்ணும் எண்ணங்களின் தூய்மையாலும், நெஞ்சில் இன்பதுன்ப உணர்வுகளாலும் அறத்தை அறியக்கூடுமே அன்றி புறத்தே உள்ள உயர்வு தாழ்வுகளால் அறியமுடிகிறது.

**நல்லொழுக்கம்**

ஒழுக்கமோடு வாழும் போது நற்சிந்தனை இயல்பாகவே வந்துவிடுகிறது. ஆண்மகன் எவன் ஒருவன் நல்லொழுக்கங்களைப் பெற்று தன் குடும்பத்தை அன்பாக செலுத்தி வாழ்கின்றானோ அவனை அவ்வூர் மக்களும், அவனுடைய நாடும் சேர்ந்தும் போற்றி புகழ்மாலை சூட்டும்.

**‘‘தாரம் நல்வதம் தாங்கித் தலைநின்மின்**
**ஊரும் நாடும் உவத்தல் ஒருதலை**
**வீரவென்றி விறல்மிகு விண்ணவர்**
**சீரின் ஏத்திச் சிறப்பு எதிர்கொள்பவே** (வளையாபதி.11)

என்ற பாடலின் வழியே புகழ் குறித்து குறிப்பிட்டுள்ளது. இதே போன்று சிறந்த ஒழுக்க நெறியைப் பின்பற்றி வாழ்பவர்கள் மேலான உலக இன்பத்தையும், மோட்சத்தையும் அடைந்து நிலைத்த இன்பத்தை பெறுவர் என்பதை,

**‘‘நகைநனி தீதுதுணி நன்றி யார்க்குப்**
**புகைநனி தீதுபணிந்தீ யாரோடும்**
**மிகைநனி பொருள் என்று இறத்தல் இவரே**
**வகைமிகு வானுலகு எய்திவாழ் பவரே”**(வளையாபதி.74)

என்ற பாடல் மூலம் ஒவ்வொரு மனிதனும் உள்ளத்தைத் தூய்மையுடன் வைத்தலே அறமாகும் அறம் என்பது தூய எண்ணம், சொல். செயல் சேர்ந்த

ஒன்றாகும். ஒருவன் அறத்தோடு வாழ்க்கையை நடத்திச் செல்ல எண்ணம் தூய்மையாக இருந்தால் தான் சொல்லும் செயலும் தூய்மையாக அமையும், அறத்தின் வழியே செல்லும் நல்லொழுக்கதினால் தான் வாழ்வில் இன்பத்தை அடைகின்றான். என்பதை இப்பாடலின் மூலம் மகிழ்ச்சி பற்றி வளையாபதி கூறியுள்ளதை அறியமுடிகிறது.

**முடிவுரை**

உறுதிப்பொருள்கள் நான்கனுள் முதன்மையாக இருப்பது அறமாகும். அறத்தின் வழியே பொருளையும், இன்பத்தையும் பெருபவனுக்கு வீடு பேறு இயல்பாக அமைந்திடும். மனிதன் நிலைக்குமென்றாலும் பொய்கூறாது வாழ்பவர்களுக்கு இம்மையும் மறுமையும் வீடு பேற்றையும் தரும். நிலையில்லாத செல்வத்தைக் கொண்டு பலருக்கும் உதவி செய்து வாழ்ந்தால் நிலைத்தப் புகழை அடைய முடியும். நிலையில்லா இளமைப் பருவத்தில் நல்ல அறங்களைச் செய்து நிலைத்தப் புகழோடு வாழவேண்டும். ஒவ்வொரு மனிதனுக்கும் அறச்சிந்தனைகள் இயல்பாக அமைந்திட வேண்டும் என்று வளையாபதி வற்புறுத்துகிறது. மனித வாழ்க்கையின் மேன்மைக்கும் சமுதாய முன்னேற்றத்திற்கும் அடிப்படையாக அமைவது தனிமனித வாழ்வியல் அறங்கள்தாம் என்று வளையாபதி ஒங்கிச் சொல்கின்றது. மனித வாழ்க்கைக்கு தேவையான வாழ்வியல் அறங்களை எடுத்து இயம்பியுள்ள வளையாபதிக் காப்பியம் என்றென்றும் போற்றுதலுக்குரியதாகும். பிற உயிர்களிடத்து அன்பு செலுத்த வேண்டும். ஊழ்வினை பற்றி நினைக்காமல் இருக்க வேண்டும். பிறர் மனைவியை விரும்பும் கயவர்களுக்கு பழியும். பாவமும், பகையும் ஆகியவை உறுதியாக வந்து சேரும் என்றும், ஒவ்வொரு மனிதனுக்கும் அறச்சிந்தனைகள் இயல்பாகவே அமைய வேண்டும். அப்போது தான் அவனுடைய வாழ்க்கை செம்மாந்து அமையும் என்பதை காப்பியங்கள் உணர்த்துவதை உணர முடிகிறது.